2022-2025 காலப்பகுதிக்கு நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கான நிலக்கரி கொள்வனவின் பெறுகைச் செயல்முறையின் மதிப்பீடு பற்றிய விசேட கணக்காய்வு அறிக்கை தொடர்பான கௌரவ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் அவர்களின் அவதானிப்புகள்.

	அரசாங்க பொறுப்புமுயற்சிக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்	மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்களின் அவதானிப்புகள்.
01	அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை வழிகாட்டல் நியதிகளின்படி, நிலக்கரி பெறுகைச் செயல்முறையுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரின் பொறுப்பையும் சரியான முறையில் நிறைவேற்றுவதை உறுதிசெய்தல் மற்றும் அத்தகைய பொறுப்புகளில் இருந்து விலகிச் செல்லும் தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.	பெறுகை வழிகாட்டல் நியதிகளின்படி, சம்பந்தப்பட்ட தரப்பினர் தங்கள் பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். விசேஷ சூழ்நிலைகளில், விலக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும். சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்தியதன் பின்னர், தொடர்புடைய சூழ்நிலைகள் கண்டறியப்பட்டு, எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்க அவர்களின் பொறுப்புகளை மிகவும் துல்லியமாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	லங்கா நிலக்கரி நிறுவனம் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.
02	பெறுகை வழிகாட்டல்களின் பந்தி 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு எந்தவித பாரபட்சமும் இல்லாமல், ஏலதாரர்களைப் பதிவு செய்யும் செயல்முறையை ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு தளர்த்துவதன் மூலம் போட்டியை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்பட	இது தொடர்பாக தேவையான பணிகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. பெறுகை வழிகாட்டுதல்கள் கோவையின் 1.2 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை பாதிக்காத வகையில், வழங்குனர்களின் அடிப்படைத் தேவைகளைப் பாதுகாப்பதற்காக, வழங்குநர்களின் பதிவு தொடர்பான 5900 இன் GCV எல்லையை	மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, வழங்குனர்களைப் பதிவுசெய்வதில் லங்கா நிலக்கரி நிறுவனத்தினால் ஏற்கனவே தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

	வேண்டும், இதனால் நிதி நம்பகத்தன்மை, அனுபவம் மற்றும் விநியோகத்தின் தரம் மற்றும் வழங்குநர்களின் போதுமான சட்டக் கடமைகள் உள்ளிட்ட 107 அடிப்படை தேவைகளைப் பாதுகாக்க வேண்டும்.	நீக்குவதற்கான திருத்தம் கொண்டு வரப்பட்டது. 03 வருட அனுபவமுள்ள எந்தவொரு நிலக்கரி வழங்குநரையும் பங்குபற்றுவதற்கு அனுமதிப்பதன் மூலம் இது போட்டித்தன்மையை அதிகரித்ததுடன் பதிவு செயல்முறை ஏற்றுக்கொள்ளக் கூடிய மட்டத்திற்கு எளிதாக்கப் பட்டுள்ளது, மேலும் நிலக்கரி வழங்கும் பழக்கம் இருக்குமானால் நிபந்தனைகள் இலங்கைக்கு மட்டுமல்ல, ஏனைய நாடுகளுக்கும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.	
03	ஏல ஆவணங்களில் திருத்தங்களைச் செய்யும் போது, அத்தகைய திருத்தங்கள் தொடர்புடைய உறுதிப்படுத்தல்கள் மற்றும் கடமைகளுக்கு பாரபட்சம் இல்லாமலும் அதன் சட்டபூர்வமான தன்மையை உறுதிப்படுத்திய பின்னரும் செய்யப்பட வேண்டும். மேலும், அந்தத் திருத்தங்களுக்கு ஏற்ப ஏல ஆவணங்களின் ஏனைய பிரிவுகள் மற்றும் ஒப்பந்தங்களைத் திருத்துவதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஏலங்களைக் கோரியதன் பின்னர், ஏல ஆவணங்களில் குறிப்பிடத்தக்க திருத்தங்களைச் செய்வதற்கான ஒவ்வொரு சாத்தியமும் தவிர்க்கப்பட வேண்டும். ஆவணங்களில் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களில், அனைத்து ஏலதாரர்களும் அத்தகைய திருத்தங்களை சரிசெய்வதற்கு ஒரு நியாயமான காலத்தை அனுமதிப்பதற்கு	அனைத்து ஏலதாரர்களுக்கும் நியாயமான கால அவகாசம் வழங்கவும், பெறுகை வழிகாட்டுதல்களின் 5.3.15 இன் விதிகளின்படி பெறுகை செய்வதில் இத்தகைய திருத்தங்களைத் தவிர்க்கவும் மற்றும் ஒப்பந்த ஆவணங்களில் அத்தகைய திருத்தங்களைச் செய்யும் பட்சத்தில் அத்தகைய திருத்தங்களுக்கு இணங்க அனைத்து வழங்குநர்கள் மீதும் கவனம் செலுத்தப்பட்டது. நியாயமான நேரம் வழங்கப்படும்.	எதிர்கால கொள்வனவுகளுக்கு நியாயமான கால அவகாசம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

	நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.		
04	நிலக்கரி கொள்முதலில், பெறுகை வழிகாட்டல்களின்படி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை திட்டத்தைத் தயாரித்து அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும், அதற்கேற்ப மாற்றியமைத்து, நிலக்கரி சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் நிதி ஒதுக்கீடுகள் குறித்த முன் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.	நிலக்கரி விநியோகத்திற்கான நிதியுதவி குறித்து தெளிவான ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளன. ஆனால் இந்த விசாரணையுடன் தொடர்புடைய காலப்பகுதியில், கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவும் மோசமான நிதி நிலைமை மற்றும் இலங்கை மின்சார சபையின் திட்டங்களின் மூலம் பெறப்பட்ட போதிய வருமானம் இல்லாமை ஆகிய காரணங்களினால், முன்னைய தவணையில் உள்ளது போன்று நாணய நிலைமை தொடர்பாக முன்கூட்டிய உடன்படிக்கையை மேற்கொள்வது கடினமாக இருந்தது. குறிப்பாக இலங்கையின் மோசமான பணப்புழக்கம் மற்றும் நாட்டில் அந்நிய செலாவணி பற்றாக்குறையால் இந்த நிலைமை பாதிக்கப்பட்டது, இது கட்டுப்படுத்த முடியாத காரணியாகும். எவ்வாறாயினும், நாட்டின் நிதி நிலைமை மேம்பட்டு வருவதாலும், ஒழுங்கற்ற முறைகள் மூலம் வருவாய் வசூல் செய்வதாலும், எதிர்கால கேள்விகளில் நிலக்கரியை சரியான நேரத்தில் வழங்குவதை உறுதி செய்வதற்கான நிதி ஏற்பாடுகள் குறித்த முன் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.	கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டின் மோசமான நிதி நிலைமை காரணமாக லங்கா நிலக்கரி நிறுவனத்தினால் பெறுகை திட்டத்தின்படி செயல்பட முடியவில்லை என்பது அவதானிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், நிலக்கரி பெறுகை செயல்முறை குறித்து ஆலோசனை வழங்க வேண்டும் என்றும் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.
05	அதிக வழங்குனர்களிடமிருந்து பெறுகை செய்தால், அத்தகைய கூட்டத்தின் சட்டபூர்வ ஆளுமை உறுதிப்படுத்தப்பட வேண்டிய	இது தொடர்பான ஏல ஆவணத்தின் அந்த பகுதிக்கான தேவைப்பாடு சட்ட ஆலோசனையைப் பெற்றதன் பின்னர் திருத்தப்பட்டு,	லங்கா நிலக்கரி நிறுவனத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தல்

	அதேவேளையில் ஏல ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் வலுவூட்டப்பட வேண்டும், இதனால் அதன் திறனை உறுதிப்படுத்தவும் மற்றும் தரமான நிலக்கரி இருப்புகளை சரியான நேரத்தில் பெறுவதனை உறுதிப்படுத்தவும் வேண்டும்.	அழைக்கப்பட்ட விலைமனுக்களுக்கான திருத்தப்பட்ட ஏல ஆவணத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் தடைநீக்கமும் பெறப்பட்டுள்ளது. எதிர்கால கேள்விகளில், சட்டமா அதிபர் திணைக்களத்திடம் தடைநீக்கம் பெற்ற பின்னரே மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும்.	வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.
06	நிலக்கரி பெறுகை தொடர்பான கூட்டுக் குறியீடுகளை நிர்ணயம் செய்வதில், அரசுக்கு அதிகபட்ச பொருளாதாரப் பலன்களைப் பெறுவதற்காக, மேற்கூறிய குறியீடுகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பிராந்திய குறியீடுகளை சரியான நேரத்தில் மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நிச்சயமற்ற நிலையில் நாட்டுக்கு மிகவும் சாதகமான குறிகாட்டிகளைப் பயன்படுத்துவது தொடர்பாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திடமிருந்து மேலதிக அவதானிப்புகளைப் பெறுவதற்கு நிலக்கரி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், கொழும்பு பல்கலைக்கழகமும் இதனை அவதானிக்குமாறு கோரப்பட்டுள்ளதுடன், அனைத்து பிராந்திய குறிகாட்டிகளையும் உரிய நேரத்தில் மீளாய்வு செய்து, மிகவும் சாதகமான குறிகாட்டிகளின் அடிப்படையில் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.	லங்கா நிலக்கரி நிறுவனத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.
07	ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட வழங்குர்கள் திறந்த சர்வதேச பெறுகை செயல்முறையை கடைபிடிக்கும் போது பெறுகைகளில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் பெறுகை நடவடிக்கைகளைத்	இந்த விடயத்தில் கவனம் செலுத்திய பின்னர், நிலக்கரி நிறுவனம் இப்போது ஒரு திறந்த சர்வதேச கேள்வி செயல்முறையைத் தொடங்குவதில் ஒரு வழங்குனரின் நிதி மற்றும் தொழில்நுட்ப நம்பகத்தன்மையை மதிப்பிடும் கேள்வி ஆவணங்களில்	லங்கா நிலக்கரி நிறுவனத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

	தொடங்குவதற்கு 2022 செப்டம்பர் 22 திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தினூடாக அங்கீகாரம் அளிக்கப்பட்டது, அத்துடன் திறந்த சர்வதேச பெறுகை செயல்முறையின் தொடக்கத்தில், நிலக்கரி நிறுவனத்தால் தற்போது வழங்குனர்களை பதிவு செய்வதில் நிதி மற்றும் தொழில்நுட்ப திறன்களை மதிப்பிடுவதற்கான குறைந்தபட்ச அடிப்படை தகுதிகள் ஏலதாரர்களை மதிப்பிடுவதற்கான அளவுகோலாக ஏல ஆவணங்களில் சேர்க்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.	குறைந்தபட்ச அடிப்படைத் தகுதிகளைச் சேர்த்துள்ளது. இந்த நிலைமை பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து ஏலம் பெறுவதை பாதிக்காது. இது ஏற்கனவே திறந்த சர்வதேச ஏல ஆவணத்தில் பிரிவு 2.8 ஆக திறந்த ஏலத்தில் தகுதி அளவுகோலாக சேர்க்கப்பட்டுள்ளது.	
08	தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், இந்தக் பெறுகை தொடர்பான உகந்த அனுமதியை வழங்குவதற்கான தகவல்களைப் பெறுவதற்கும் அமைச்சரவைக்கு போதுமான கால அவகாசம் கிடைக்கும் வகையில், தாமதமின்றி துல்லியமான தகவல்களை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட வேண்டும்.	எதிர்கால கொள்முதலில் அதற்கேற்ப கையாள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.	லங்கா நிலக்கரி நிறுவனத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.